

# சிங்கப்பூர்த் தமிழர்களின் கலாசாரத்தில் விழாக்கள்

Article by Sundari S Balasubramaniam
Pictures contributed by Yashodha Devi Natarajan

பல இன மக்கள் ஒற்றுமையாக வாழும் நாடான சிங்கப்பூரில் இந்தியா, இலங்கை, சீனா, மலேசியா, இந்தோனீசியா, ஐரோப்பா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து மக்கள் குடியேறியிருந்தாலும் சிங்கப்பூரைத் தாய்நாடாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பல இன மக்களால் இங்கு பலவித கலாசாரங்களையும் காணலாம்.

பண்பாடு, கலாசாரம், மரபு என்பன ஒரு சமுதாயத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையை, அவர்களின் தனிப்பட்ட பழக்கவழக்கங்களை, நம்பிக்கைகளைக் குறிப்பதாகும். இவையாவும் அச்சமுதாயத்தின் குறிக்கோள்கள், தேவைகள் அடிப்படையில் தோன்றியனவாகும். ஒவ்வொரு சமுதாயமும் தனக்கெனச் சில தனித்த மரபுகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். மரபுகள் சமுதாயந்தோறும் மாறுபட்டாலும் அவை அச்சமுதாயத்தின் சிறப்பியல்புகளைக் காப்பதால் மனித சமுதாயம் அவற்றை இன்றும் போற்றிப் பாதுகாத்து வருகின்றது. ஒரு சமுதாயத்தின் கலாசாரத்தில் அவர்கள் கொண்டாடும் விழாக்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அதுமட்டுமல்லாமல் அவர்களின் வளர்ச்சி, போக்கு, வீழ்ச்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றையும் நமக்குக் காட்டுவனவாக உள்ளன.

தமிழரின் தனித்தன்மையைக் காலங்காலமாக அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பறைசாற்றுகின்றன. விழாக்கள் சமயம் சார்ந்த சடங்குகளோடும், இயற்கையோடும் தொடர்பு உடையனவாக உள்ளன. இவ்விழாக்கள் மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் சோர்வினைப் போக்கி இன்பமும் மகிழ்வும் தருகின்றன. இவ்வாறு சமுதாயத்தை ஒன்றுபடுத்தி மக்களை மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதே விழாக்களின் முக்கிய நோக்கமாகும். மேலும், நம்முடைய பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றை அறிவதற்கும் உதவுகின்றன. சிங்கப்பூரில் தமிழரின் கலாசாரத்தில் அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பற்றி இங்குக் காணலாம்.

சிங்கப்பூரில் தமிழர் கொண்டாடும் விழாக்களை

1. குடும்ப விழாக்கள்
2. சமுதாய விழாக்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

## குடும்ப விழாக்கள்

குடும்பத்தினர் தமது இல்லத்தில் கொண்டாடும் விழாக்களைக் குடும்ப விழா எனலாம். அவை குடும்பத்தினரின் சமயம் சார்ந்தவையாகவும் சடங்குகளோடு இணைந்தவையாகவும் உள்ளன. பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல சடங்குகள் காலத்தின் வளர்ச்சியில் இன்று விழாக்களாக உருவெடுத்துள்ளன. இங்கு கொண்டாடப்படும் விழாக்களில் புதுமனை புகுவிழா, அறுபதாம் ஆண்டு விழா, காதணிவிழா, பூப்புநீராட்டு விழா, மணவிழா, வளைகாப்பு விழா போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.



புதுமனை புகுவிழாச் சடங்கு

### புதுமனை புகுவிழா:

புதுமனை புகுவிழா என்பது புதிதாக வீடு வாங்கிக் குடியேறுவதற்கு முன்பு செய்யப்படும் சிறப்பு பூஜையாகும். நடுவீட்டில் விளக்கேற்றி, புரோகிதர் யாகம் வளர்த்து, மந்திரங்கள் ஓதி,  பூஜை செய்து, பிறகு பால் காய்ச்சிச் சர்க்கரையிட்டு, வந்தவர் அனைவருக்கும் விருந்துடன் வழங்குவர்.

### பூப்புநீராட்டு விழா:

பூப்பெய்திய பெண்ணுக்குப் பூப்புநீராட்டு விழா செய்கின்றனர். பெண் பருவமடைந்த பதினாறாம் நாள் நடைபெறும் இவ்விழாவில் முதலில் பெண்ணை நீராடச் செய்து தாய்மாமன் சீதனமாகக் கொண்டுவந்த நகை, ஆடை ஆகியவற்றைக் கொடுத்து அணியச் செய்வர். பழம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கிழங்கு, தேங்காய் முதலியவற்றைச் சேலை முந்தானையில் கொட்டி மடி நிரப்புவர். தாய்மாமன் மாலை அணிவித்து சடங்கை முடித்து வைப்பார். அன்று வீட்டிற்கு வந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் விருந்து படைப்பர். அக்காலத்தில் இப்பெண் திருமணம் செய்வதற்கு ஏற்றவள் என எல்லாருக்கும் பறைசாற்றுவதற்காக இச்சடங்கு ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் தாய்மாமனுக்கு இவ்விழாவில் முதலிடம் கொடுப்பது, சகோதரியின் பிள்ளைகளைத் தந்தைபோல் இருந்து கவனித்துப் பேணுவார் என்பதாகும்.



பூப்பு நீராட்டு விழாச் சடங்கு

## திருமண விழா

திருமண விழா அவரவர் வசதிக்கேற்ப ஆடம்பரமாகவும் எளிமையாகவும் நடத்தப்படுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் கூடிச் சிறப்பாக நடத்தப்படும் இவ்விழாவில் மணமக்கள் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மணமேடையில் பண்டிதர் அக்கினிக் குண்டம் வளர்த்து மந்திரங்கள் ஓத, மங்கல நாதம் ஒலிக்க மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டுவதோடு முடிவடைகிறது. மணமகன் மணமகள் காலில் மிஞ்சி மாட்டுவதும், தாலி கட்டுவதும் பிறகு அக்கினிக் குண்டத்தை வலம் வருவதும் திருமண விழாவின் முக்கிய அம்சங்களாகும். விருந்தினர் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்குவர். இவ்விழாவில் ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் வழக்கத்திற்கேற்பச் சடங்குகள் செய்வர். பெரியவர்கள் மணமக்களுக்கு நலங்கு எனக் கூறப்படும் சடங்கு செய்வர். இதில் மணமக்களுக்குச் சந்தனம் குங்குமம் தடவி மலர் தூவி ஆசீர்வாதம் செய்வர். மணமக்கள் பெரியவர்களின் காலில் விழுந்து வணங்குவர். மணநாளுக்கு முன் தினம் பெண் வீட்டார்களால் மாப்பிள்ளை அழைப்பு என்ற சடங்கு நடத்தப்படுகிறது.

மாப்பிள்ளையைத் திருமண மண்டபத்திற்கருகில் உள்ள கோவிலில் இருந்து ஊர்வலமாக மண்டபத்திற்கு அழைத்து வருவர். ஊராருக்கு இவர் தான் தங்கள் மாப்பிள்ளை என்று பெருமை பொங்க காட்ட இவ்வைபம் நடத்தப்படுகின்றது. பிறகு மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணை அவர் வீட்டிலிருந்து திருமண மண்டபத்திற்கு அழைத்து வருவர். மறுநாள் திருமணத்திற்கு முன் மாப்பிள்ளை காசியாத்திரை செல்லும் சடங்கு நடைபெறும். மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்வதும் மணப்பெண்ணின் சகோதரர் அவரை சமாதானம் செய்து அழைத்து வருவதும் நடைபெறும். இது அந்தணர் சமூகத்திலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு சடங்காகும். மணப்பெண்ணின் சகோதரன் மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தலும் இதையொட்டி நடைபெறும். இவ்வாறு கோலாகலமாக நடைபெறும் திருமண விழா மணமக்கள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான விழாவாகும்.



All rights reserved, Singapore: Asiapac, 2003.

## வளைகாப்பு விழா

பெண்களின் வாழ்வில் மிக முக்கியமான மற்றொரு விழா அவர்கள் முதன் முதலில் தாய்மை அடைந்த ஏழாம் மாதத்தில் அல்லது ஒன்பதாம் மாதத்தில் நடத்தப்படுகிறது. பெண்ணின் பெற்றோர்களால் அவளின் புகுந்த வீட்டில் நடத்தப்படும் சிறப்பான வைபவமாகும். பெண்ணிற்குக் குடும்பத்தில் உள்ள மூத்த பெண்கள் கண்ணாடி வளையல்கள் அணிவிப்பர். கண்ணாடி வளையல் அணிவது அழகுக்காக மட்டுமல்லாமல் மற்றொரு பயனும் உள்ளது. தாய்மை அடைந்த பெண் எங்கு சென்றாலும் அவளின் வளையல் ஓசை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும். ஏதேனும் ஆபத்து என்றால் அவள் இருக்கும் இடத்தை மற்றவர்களால் எளிதில் அறியவும் உதவும். சடங்கு முடிந்ததும் பொங்கல் சோறு, தேங்காய்ச் சோறு, புளிச்சோறு, எலுமிச்சைச் சோறு, தயிர்ச் சோறு ஆகிய ஐந்துவகை உணவுகளும், பலகாரங்களும் சமைத்து அனைவருக்கும் பரிமாறுவர். வீட்டில் உள்ள பெண்கள் யாவருக்கும் வளையல்கள் வழங்கப்படும். விழா முடிந்ததும் பெண்ணைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவர். குழந்தை பிறக்கும் வரையில் பெண்ணின் பெற்றோர்களே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்வர்.



வளைகாப்பு விழா

## பதினாறு கும்பிடுதல்

குழந்தை பிறந்த 16ஆம் நாள் நடக்கும் இச்சடங்கில் இதுநாள் வரை தனித்து இருந்த தாயும் சேயும் அன்று எண்ணெய் தேய்த்து நீராடிப் பிறகு அறையை விட்டு வெளியே வருகின்றனர். அன்று கணவர் வீட்டிலிருந்து அனைவரும், நெருங்கிய சுற்றத்தாரும் வந்து குழந்தையை ஆசீர்வதிக்கின்றனர். குழந்தைக்கு வளையல், தண்டை, காப்பு, அரைஞாண் போன்றவற்றை அணிவிப்பர். இரண்டு பானைகளில் வெண்பொங்கல் மற்றும் சர்க்கரைபொங்கல் செய்து இறைவனுக்குப் படைக்கின்றனர். பிறகு குழந்தையின் தாயும் தந்தையும் இறைவனை



பதினாறாம் நாள் நடைபெறும் சடங்கு

வணங்கியதோடு அவர்கள் தீட்டு கழிந்துவிட்டதாகக் கருதப்படுவர். சிலர் பண்டிதரை வரவழைத்து பூர்ண கும்பம் வைத்து, ஹோமம் வளர்த்து மந்திரங்கள் கூறி பூஜை செய்துப் பிறகு கும்ப நீரை வீட்டின் எல்லா இடங்களிலும், அங்குள்ள அனைவரது தலையிலும் தெளித்துத் தீட்டு கழிக்கின்றனர். இச்சடங்கு செய்த பிறகு தாயும் சேயும் கோயிலுக்குச் சென்று வழிபடுவர்.

## காதணி விழா:

குழந்தையின் முதல் பிறந்த நாளுக்குப் பிறகு ஒரு விசேட நாளில் முடி இறக்கிக் காது குத்திக் காதில் காதணி அணிவித்தல் நடைபெறுவது வழக்கம். காது குத்தல் என்பது பழந்தமிழரின் போர்ச்செயல்களின் தாக்கம் என்பர். அக்காலத்தில் வீரத்தை உயிரெனக்கருதிய தமிழர்கள் குழந்தை இறந்தே பிறந்தாலும் உடலில் வீரத் தழும்பு இருக்க வேண்டும் என வாளினால் அடையாளம் இட்டுப் புதைப்பர். அப்பழக்கம் தான் காது குத்தும் விழாவாக இன்றும் கடைபிடிக்கப்படுகிறது என்கின்றனர் ஆய்வாளர். தலை முடி இறக்கிக் காது குத்தும் நிகழ்ச்சி தமிழர் வாழ்வில் இரண்டரக் கலந்துள்ளது. விழாவன்று அனைவரும் குலதெய்வம் கோயிலுக்குச் செல்வர். குல தெய்வம் என்பது அவர்கள் குடும்பத்தில் வழி வழியாகப் பாட்டனார், முப்பாட்டனார் காலத்திலிருந்து வழிபட்டு வரும் கடவுளாகும். குழந்தையைத் தெய்வத்தின் முன் கிடத்தி வழிபடுவர். பிறகு தாய்மாமன் மடியில் உட்காரவைத்து நாவிதரைக் கொண்டு தலை முடியை மழிக்கச் செய்வர்.


முடி இறக்கும் வைபவம்

பிறகு குழந்தையை நீராட்டி புத்தாடை அணிவித்துத் தலையில் அரைத்த சந்தனத்தைப் பூசுவர். மீண்டும் தாய்மாமன் மடியில் உட்காரவைத்துப் பொற்கொல்லரைக் கொண்டு குழந்தைக்குக் காது குத்திக் காதணி அணிவிப்பர். இச்சடங்கு முடிந்ததும் எல்லோருக்கும் காப்பரிசி (பச்சரிசி, பாசிப்பருப்பு, எள்ளு, வெல்லம் கலந்த கலவை) வழங்கப்படுகிறது. பிறகு அனைவருக்கும் விருந்தளிக்கப்படும்.

## அறுபதாம் திருமண விழா

அறுபதாம் திருமண விழா என்பது வயதான தம்பதிகளின் 60ஆம் வயதில் நடத்தப்படும் திருமணமாகும். ஆண் 60 வயதை எட்டும்போது அவரின் குழந்தைகள், பேரன் பேத்திகள், உற்றார் உறவினர் அனைவரும் சேர்ந்து நடத்தும் கோலாகலமான நிகழ்ச்சியாகும். இவ்விழாவில் தம்பதிகள் இருவரும் நீண்ட ஆயுளோடும், ஆரோக்கியத்தோடும் வாழவேண்டும் என்று இருவருக்கும் அதே சம்பிரதாயங்களுடன் உற்றார் உறவினர் அனைவராலும் திருமணம் செய்துவைக்கப் படுகிறது. மணமகன் மணமகள் கழுத்தில் இரண்டாம் முறையாகத் தாலிகட்டும் வைபவத்துடன் இனிதே நிறைவேறும் இவ்விழாவில் அனைவரும் மணமக்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்து வேதத்தின்படி மனிதனின் ஆயுள் 120 வருடங்களாகும். அதில் பாதியைக் கடந்த இத்தம்பதிகள் மீதி வருடங்களையும் ஆரோக்கியத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழவேண்டும் என்பதுதான் இத்திருமணத்தின் முக்கிய நோக்கமாகும்.

## சமுதாய விழாக்கள்

இல்லந்தோறும் கொண்டாடப்படும் விழாக்கள் பல சமுதாயம் சார்ந்தவையாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அனைவர் இல்லத்திலும் அதே நாளில் இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பல, சமயம் சார்ந்தவையாகவும் உள்ளன. சிறப்பாகக் கொண்டாடப்படும் சமய விழாக்களில் முக்கியமானது தைப்பூசம், தீமிதி ஆகியனவாகும். பண்டிகைகளில் பொங்கல் விழா, தீபாவளி, ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

## தைப்பூசம்

தைப்பூசத் திருவிழா தமிழர்களின் கடவுளாகிய முருகக் கடவுளிடம் பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மிகப் பழமையான டேங்க் ரோடு தண்டாயுதபாணி ஆலயத்தில் 1835ஆம் ஆண்டு முதல் இவ்விழா சிறப்பாக நடைபெற்றுவருகிறது. உலகில்

உள்ள அனைத்து சிவன் கோயில்களிலும், முருகன் கோயில்களிலும் தைப்பூசம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆனால் மற்ற நாடுகளைவிட சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் மிகக் கோலாகலமாக இத்திருவிழா நடைபெறுகிறது. சிறுவர் முதல் முதியோர் வரை பால் குடம், பால் காவடிகள், அலகுக் காவடிகள் எடுத்தும், தேர் இழுத்தும், தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக்கொள்கின்றனர். அதிகாலை ஒரு மணிக்குத் தொடங்கி மறுநாள் நள்ளிரவு வரை சிராங்கூன் சாலைப் பெருமாள் ஆலயத்திலிருந்து டேங்க் ரோடு தண்டாயுதபாணி ஆலயத்திற்கு வரிசையாகச் செல்லும் பலவகையான அலகுக் காவடிகளை ஏராளமான வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் வியப்புடன் கூடிப் பார்ப்பதைக் காணலாம். தைப்பூச நாளில் பெருமாள் ஆலயத்திலும் தண்டயுதபாணி ஆலயத்திலும் வரும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும் காவடிகள் செல்லும் வழி நெடுகிலும் பக்தர்கள் தண்ணீர் பந்தல்கள் அமைத்துத் தாகம் தணிக்கும் அறப்பணிகளையும் செய்கின்றனர்.



அலகுக் காவடி எடுக்கும் பக்தர்

## தீமிதித் திருவிழா

இந்துக்களால் கொண்டாடப்படும் தீமிதித் திருவிழா சிங்கப்பூரில் 1855ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரின் மிகப் பழமையான கோவிலான சவுத் பிரிட்ஜ் ரோட்டில் அமைந்திருக்கும் ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் கொண்டாடபடுகிறது. மகாபாரதத்தின் நாயகியான திரௌபதை, மாரியம்மனின் அம்சமாகக் கருதப்படுகிறாள். அவள் போரின் இறுதியில் தீமித்துத் தான் தூய்மையானவள் என நிரூபித்த நிகழ்ச்சியின் ஞாபகமாகக் கொண்டாடப்படும் இவ்விழாவில் முதல் நிகழ்ச்சியாக மாரியம்மனின் பரிவாரங்களுள் முக்கியத் தெய்வமான ஸ்ரீ பெரியாச்சி அம்மனுக்குப் பூஜை நடைபெறுகிறது. இதையடுத்து வேப்பிலைக் கரகமும் மாவிலைக் கரகமும் எடுக்கப்படுகின்றன. விழாவிற்கு முதல் நாள் திரௌபதைக்கும் அர்ஜுனருக்கும் திருமணச் சடங்கு நடைபெறுகிறது.

அடுத்து முக்கிய நிகழ்ச்சியான அரவானைக் களப்பலி கொடுக்கும் சடங்கு நடைபெறுகிறது. இத்தீமிதி விழாவில் பல சடங்குகள் மகாபாரதப் பின்னணியைக்கொண்ட சடங்குகளாகும். இதன் பிறகு பக்தர்கள் பால்குடம், கும்பிடுதண்டம், அங்கப்பிரதட்சணம் போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர். தீமிதிக்கும் நாளன்று அதிகாலையிலேயே தீமிக்கும் சடங்கை ஆரம்பித்து விடுவர். தீமிதிக்கு இரண்டு நாட்கள் முன்பாக வெள்ளி இரத ஊர்வலமும் நடைபெறும்.

## பொங்கல் விழா

பொங்கல் விழா மத வேறுபாடின்றி தமிழர் எல்லாரும் தை மாதத்தில் கொண்டாடும் ஒரு விழாவாகும். நான்கு நாட்களுக்கு இவ்விழா கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகிப் பண்டிகையன்று வீட்டைச் சுத்தப்படுத்தி தேவையில்லாதவைகளை அப்புறப்படுத்துவர். இரண்டாம் நாள் அன்றுதான் தைமாதம் முதல் நாள் பொங்கல் வைத்துச் சூரியனை வழிபடுவர். மூன்றாம் நாள் நமக்கு உதவும் ஆடு மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் பொங்கலிட்டு கால்நடைகளுக்குப் படைப்பர். சிராங்கூன் சாலையில் இந்த வருடம் மாடுகளை ஊர்வலமாக நடத்திச் சென்று மாட்டுப் பொங்கலின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தினர். நான்காம் நாள் காணும் பொங்கலன்று மக்கள் தம் உறவினர்கள் விடு சென்று உரையாடி மகிழ்வர்.

## தீபாவளித் திருவிழா


மிழ் வருடத்தின் ஐப்பசி மாதத்தில் வரும் இப்பண்டிகை உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களால் கொண்டாடப்படுகின்றது. தீபாவளிக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் வருடம் ஒருநாள் அனைவரும் புதிய ஆடைகள் உடுத்தி கோவிலுக்குச் செல்வதும், வீட்டுப் பெரியவர்களிடம் ஆசி பெறுவதும் எல்லாராலும் கடைபிடிக்கப்படுகிறது. தீபாவளி அன்று அதிகாலையிலேயே தலைக்கு எண்ணெய் வைத்து நீராடி வீட்டில் பலகாரங்கள், இனிப்பு வகைகள் பல செய்து தாமும் உண்டு அண்டை வீட்டாருக்கும், நண்பர்களுக்கும் கொடுத்து மகிழ்வர். தீபாவளிக்கு முதல் நாள் இறந்த முன்னோர்களுக்குப் பலவித பலகாரங்கள், உணவு வகைகளை நீண்ட தலை வாழை இலையில்பரிமாறி புது ஆடைகள் வைத்துப் படையல் வைப்பர்.



முன்னோர்களை நினைவு கூறுமுகமாக செய்யும் இந்நிகழ்ச்சியில் வீட்டு உறுப்பினர் அனைவரும் கலந்துகொள்வர். சிங்கப்பூரில் தீப ஒளியேற்றலும் தீபாவளிக்கென்றே பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்படும் தீபாவளிச் சந்தையும் சிறப்பு வாய்ந்தவை. தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு தமிழர் கடைகள் அதிகமாக உள்ள சிராங்கூன் சாலை நெடுகிலும் அலங்கார வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படும். மற்றும் தீபாவளிச் சந்தையில் பல விதமான கடைகள் ஒரு கூரையின் கீழ் களைகட்டும்.

## விழாக்களில் முக்கியமாக இடம்பெறும் சடங்குகள்

விழாக்களில் முக்கிய அம்சமாக ஹோமம் வளர்த்தல், பூரண கும்பம் வைத்தல் (ஒரு சிறிய குடத்தை வெள்ளை நூலால் சுற்றி, அதில் நீரை நிரைத்து, அதன் வாயில் மாவிலைகளுடன் முழுத் தேங்காயை வைத்து அதன் மேலே சிறிய பூ மாலை அணிவிப்பர்), வாசலில் மாக்கோலம் இட்டு மாவிலைத் தோரணம் கட்டுதல் ஆகியன மிக முக்கியமாக இடம்பெறும். பண்டைய தமிழரிடம் அக்கினி வளர்த்து ஹோமம் செய்யும் வழக்கமில்லை. பின்னர் இயற்கையை வணங்கும் ஆரியர்களின் தாக்கத்தினால் ஏற்பட்டது என்கின்றனர் ஆய்வாளர். இப்போது எந்த நிகழ்ச்சியானாலும் பண்டிதர் யாகம் வளர்த்து மந்திரம் சொல்லாமல் நடப்பதில்லை. அடுத்து நம் நாட்டில் மஞ்சள் குங்குமம் மங்களமரமான? பொருட்களாகக் கருதப்படுகிறது. எல்லா முக்கிய விழாக்களிலும் மஞ்சள் குங்குமம் இடம்பெறும். பூப்பு நீராட்டு விழா, திருமணச்சடங்கு, புதுமனை புகு விழா, ஆகிய மங்கள நிகழ்ச்சிகளில் மஞ்சள் கரைத்துத் தெளிக்கப்படுகிறது. எல்லா நிகழ்ச்சிகளிலும் மஞ்சளை சிறிது தண்ணீர் சேர்த்து இறுக்கமாகப் பிள்ளையார் பிடித்து அதற்கு குங்குமம் இட்டு அருகம்புல் வைத்து பூசை செய்யப்படுகிறது. விருந்தினர் அனைவருக்கும் வெற்றிலை பாக்கு மஞ்சள் குங்குமம் தவறாமல் கொடுக்கப்படும்.



வண்ணக் கோலம்


## ஆதாரக் குறிப்புகள்

கலியபெருமாள், கா. (2005). உலகத்தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்: *compendium on the culture of the Tamils.* மலேசியா: வள்ளலார் அன்பு நிலையம்.
Call no.: R 306.095482 KAL

காந்தி, கா. (2003). தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
Call no.: R 954.82 GAN

Sundararajan, Immanuel G. (1984). *Tamil culture and Christianity.* Singapore: Christian Education Programme, Ang Mo Kio Tamil Methodist Church.
Call no.: R SING 294.5172 SUN

Chitra Soundar. (2003). *Gateway to Indian culture.* Singapore: Asiapac.
Call no.: R SING 305.891411

(2005, October 23). மகாபாரதத்தில் உருவானத் திருவிழா. தமிழ் முரசு, pp 3.

(2007, February 2). தைப்பூசத் திருவிழா 2007. தமிழ் முரசு, pp 1 and 4.

(2006, January-February). தைப்பூசத் திருவிழா. சிங்கைச் சுடர், 6(1), 2-3.



## Festivals in Singapore Indian culture

This article highlights some of the important Indian festivals celebrated in Singapore. Festivals are culturally imperative in the lives of people regardless of race or religion. Indian festivals in Singapore can be categorised as Family festivals and Social festivals. The former includes housewarming and weddings where family members and friends come together in a celebrative spirit. The festivals like Deepavali, Pongal and Thaipusam are Social festivals which are embraced at a communal level to promote goodwill, understanding and harmony among people. The article also gives an idea of how the celebrations are carried out and the various ceremonies performed.